DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF VI ADDITIONAL SESSIONS JUDGE**
Case No. 28 of 2020 dated:04.09.2024

**Deposition of witness for LW 25 / P.W.22**

Name : எம்.எஸ். வசந்த சுந்தரி
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of September 2024.

(1ம் எதிரி ஆஜர்.)

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u> –

நான் சென்னை தடய அறிவியல் துறையில் துணை இயக்குநராக பணிசெய்து தற்போது விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 2019ம் வருடத்தில் தடய அறிவியல் துறை வேதியியல் பிரிவில், துணை இயக்குநராகவும், நஞ்சு இயல் பிரிவில் பொறுப்பாளராகவும், பணி செய்தேன். கடந்த 24.09.2019 அன்று பேராசிரியர், திரு.கோகுலகிருஷ்ணன் ஸ்டான்லி மருத்துவனை சென்னை, அவர்களிடமிருந்து எம்.கே.பி. நகர் காவல்நிலையம் கு.எண்.592/2019 வழக்கிற்கான முத்திரையிடப்பட்ட பொருட்கள் தலைமை காவலர் திரு.கோகுல்ராஜ் அவர்களிடமிருந்து 25.09.2019 அன்று பெறப்பட்டது.

அது எமது துறை எண். TOX.H.No.2865/2019 ன்கீழ் பெறப்பட்டது. ஒரு நபரின் உடற்கூறாய்வில் எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகள் 7 ஐட்டங்கள் பெறப்பட்டன. அதை இரசாயண பகுப்பாய்விற்கு உட்படுத்தினேன். அதில் 1 முதல் 4 ஐட்ட உறுப்புகளில் சைனைடு என்னும் வேதிப்பொருள் கண்டறியப்பட்டது. ஐட்டம் 5 முதல் 7 வரையில் உள்ள உறுப்புகளில் சைனைடு என்னும் வேதிப்பொருள் கண்டறியப்படவில்லை. இது சம்பந்தமாக நான் கொடுத்த அறிக்கை TOX.H.No.2865/2019, dated 30.09.2019 ஆகும். (அது ஏற்கனவே அ.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டது.) மேலும் 04.10.2019 அன்று மேற்படி காவல் நிலைய குற்ற எண் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்தான 5 ஐட்ட சொத்துகள் 10 வது பெருநகர குற்றவியல் நீதிமன்ற நடுவர் அனுப்பிய வழக்கு சொத்துகள் 5 ஐட்டங்கள் எமது துறை எண்.TOX.H.No.2974/2019 ன்கீழ் பெறப்பட்டது. மேற்படி 5 ஐட்டங்களில், 1 முதல் 4 வரை ஒரு ஐட்டமாகவும், 5 வது சொத்தானது மற்றொரு ஐட்டமாகவும் பெறப்பட்டது. பின்பு அதை இரசாயண பகுப்பாய்விற்கு உட்படுத்தியதில் ஐட்டம் நம்பர் 1 ல் சோடியம், சைனைடு கண்டறியப்பட்டது. ஐட்டம் நம்பர் 2 ல் சைனைடு கண்டறியப்படவில்லை. ஐட்டம் நம்பர் 3 ல் சோடியம், சைனைடு கண்டறியப்பட்டது. ஐட்டம் நம்பர் 4 ல் சோடியம், சைனைடு கண்டறியப்பட்டது. ஐட்டம் நம்பர் 5 ல் சோடியம் சைனைடு கண்டறியப்பட்டது. மேலும் ஐட்டம் நம்பர் 1 மற்றும் 2 தொடர் ஆய்விற்காக எமது வேதியியல் துறை CHEM/528/2019 என்ற Ref ன்கீழ் பெறப்பட்டது. அவை மண் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பகுப்பாய்விற்கு உட்படுத்தியதில் ஐட்டம் 1 மற்றும் 2 ல் மண் அடர்த்தி Distribution pattern ல் ஒத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நான் வழங்கிய

ஆய்வு அறிக்கைகள் 25.10.2019 தேதியிட்டது அ.த.சா.ஆ.25 மற்றும் 12.11.2019 தேதியிட்டது அ.த.சா.ஆ.26 ஆகும். அ.த.சா.ஆ.25 நகல் தமக்கு கொடுக்கப்படவில்லை என்று எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அதன் நகல் இன்றைய தினம் வழங்கப்பட்டது. 25.10.2019 தேதியிட்ட அறிக்கையில் ஐட்டம் நம்பர் 4ல் 9 கிராம் அளவு அழுக்கு படிந்த வெள்ளை பொருள் இருந்ததாகவும், ஐட்டம் நம்பர் 5ல் 480 கிராம் அழுக்கு படிந்த வெள்ளை பொருள் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன். ஐட்டம் நம்பர் 4ல் சோடியம், சைனைடு இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. ஐட்டம் நம்பர் 5ல் சோடியம் சைனைடு இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் 34 ஆண்டுகள் தடய அறிவியல் துறையில் வேலை பார்த்தேன். நான் எத்தனை சைனைடு வழக்குகளில் கண்டறிந்தேன் என்றால் சுமார் 60, 70 வழக்குகளை கையாண்டிருப்பேன். உடல் உள்ளுறுப்புகளில் உணவுக்குழாய் பகுப்பாய்விற்கு அனுப்பப்படவில்லை.

(நீதிமன்ற கேள்வி – சாதாரணமாக உணவுக்குழாய் பிரித்து பகுப்பாய்விற்கு அனுப்பப்படுவதில்லை.)

நான் பகுப்பாய்விற்கு என்ன முறையை பயன்படுத்துவேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த முறையை சொல்லாததால் நான் வழங்கிய அறிக்கை சாட்சிய சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. உள்ளுறுப்புகளின் எடை எத்தனை மில்லி லிட்டர் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாதாரணமாக அவைகளை பரிசோதனைக்கு உட்படுத்தியபின் அதன் அளவுகளை அறிக்கையில் குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் பரிசோதனைக்குமுன்

அவைகளின் அளவுகளை தோராயமாக பார்ப்போம். Medico legal autopsy பிரகாரம் உள்ளுறுப்புகள் சொல்லப்பட்ட அளவுகள் அனுப்பப்படவில்லை என்றாலும், அதற்கு குறைவாகவே அனுப்பப்பட்டது என்றாலும், அதனால் தான் நான் அந்த அளவுகளை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு அனுப்பப்பட்ட உள்ளுறுப்புகளின் அளவுகள் இரசாயண பகுப்பாய்விற்கு போதுமானதாக இருந்தது. அதை நான் என் அறிக்கையில் குறிப்பிடவில்லை. போதுமான அளவில் இல்லாமல் இருந்தால் பகுப்பாய்விற்கு உட்படுத்த மாட்டோம். பகுப்பாய்வில் குடலில் உள்ள பகுதியும் மற்றும் மண்ணில் இருந்த பகுதியும் ஒருங்கிணைத்து பகுப்பாய்விற்கான அறிக்கையை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் ஒன்று மருத்துவரிடமிருந்து பெறப்பட்டது, மற்றொன்று நீதிமன்றத்திலிருந்து தனித்தனியே பெறப்பட்டது. எனவே தனித்தனியே அறிக்கைகள் கொடுத்தேன். சைனைடானது சில மருந்துகளிலும் பயன்படுத்தப்படுகிறது என்றால் சரிதான். அதை சில பலகீனமானவர்கள் உட்கொள்வதால் வேதிமாற்றம் ஏற்பட்டு அலர்ஜி உண்டாவதற்கு வாய்ப்பு உண்டா என்றால் நான் அந்த துறையில் நிபுணத்துவம் பெறவில்லை. நான் அளித்த அறிக்கைகள் குறைபாடுடையதாக இருப்பதால் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Dt.04.09.2024 VI Additional Sessions Judge